வடக்கு மகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு சுற்றறிக்கை இல - 01/2025

எனது இல. **NP/03/02/GA/10/SA/CA**
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2025.10.30

பணிப்பாளர்,
விளையாட்டுத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்,

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் விளையாட்டுப் பயிற்றுநர் தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2025

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களின் CP/DEC/25ம் இலக்க 2025.07.16 ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07 ம் திகதிய அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரமும் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் NP/07/10/01/204 இலக்க 2025.09.16 **ஆம் திகதிய மற்றும்** NP/07/10/01/191(I) இலக்க 2025.10.15 ஆம் திகதிய கடிதங்களிற்கு அமைவாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவையின் **விளையாட்டுப் பயிற்றுநர் பதவி தரம் III** இல் காணப்படும் **நான்கு (04)** வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கமைய இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் பதவியில் கடமையாற்றுபவர்கள் மட்டும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு மூலமே இவ் ஆட்சேர்ப்பானது மேற்கொள்ளப்படும். இவர்களிற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வானது வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் அவர்களால் **2025 நவம்பர் மாத இறுதியில்** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025.11.19** ஆகும்.

### 1. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

**I.** வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு 2016.09.26ம் திகதி முதல் செயல்வலுவிலுள்ள வடக்கு மாகாணவிளையாட்டுத் திணைக்கள விளையாட்டுத்துறை சார் உத்தியோகத்தர் இணைந்த சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் **விளையாட்டுப் பயிற்றுநர் பதவி தரம் III** இற்கு நியமிக்கப்படுவர்.

**II.** இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

**III.** தெரிவு செய்யப்படும் விளையாட்டுப் பயிற்றுநர்கள் நியமனத்திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு பதில் கடமை காலத்திற்கு உட்படுவர். சேவைப்பிரமாணக் குறிப்பின் 14:2 இன் ஏற்பாடுகளுக்கமைய உரிய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.

**IV.** சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு **விளையாட்டுப் பயிற்றுநர் தரம் III** இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

**V.** நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைய நியமனத்திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் சித்தியடைய வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகளிற்கும் தாங்கள் கட்டுப்படவேண்டும்.

**VI.** நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 2. சம்பள அளவுத்திட்டம் :-

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 – 2025** ற்கு ஏற்ப, **விளையாட்டுப் பயிற்றுநர் பதவி தரம் III** இற்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம், ரூபா **52,250 – 10 x 800 - 11 x 1,190 – 10 x 1,320 – 10 x1,350 - 100,040/-** ஆகும். (III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 3. தகைமைகள்:-

### I. கல்வி தெழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்

வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் 08 வருடங்கள் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

**II.** தேசிய விளையாட்டுத்துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உரிய விளையாட்டுக்காக நடாத்தப்படும் (03) மாதங்களை விட குறையாத பயிற்றுநர் டிப்ளோமா பாட நெறியில் சித்தியடைந்திருத்தல் அல்லது விளையாட்டு சட்டத்தின் கீழ் உரிய துறைக்குரிய சர்வதேச அல்லது தேசிய விளையாட்டு சங்கங்களினால் வெளியிடப்பட்ட பயிற்றுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### III. உடற்தகைமை

வடக்கு மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

### IV. ஏனைய தகைமைகள்

a. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய தகைமைகளை பரிசோதனை செய்யும் தினத்திற்கு முன்னர் எட்டு (08) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விடக்கூடியதாக காண்பித்திருத்தல் வேண்டும்.

b. அண்மித்த 05 வருடங்களுக்குள் உயிர்ப்பானதும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

c. உரிய மட்டத்தில் அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

d. விண்ணப்பம் கோரும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படும் முடிவுத் தினமன்று பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 4. ஆட்சேர்ப்பு முறை :-

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப் பிரமாணக்குறிப்பு, ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக **விளையாட்டுப் பயிற்றுநர் தரம் III** பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். ஆட்சேர்ப்பின்போது அல்லது ஆட்சேர்ப்பின் பின்னர் தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

## 5. விண்ணப்பிக்கும் முறை :-

5.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை **2025.11.19** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **“செயலாளர், மாகாண கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு தமது திணைக்களத்தலைவர் ஊடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகத் தேர்விற்கான கடிதம் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

5.3 உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர்.

5.4 விண்ணபதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. எனினும், விண்ணப்பம் கோரப்பட்ட திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

## 6. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்

## 7. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

விண்ணபதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(அ). ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை (N.I.C)

(ஆ). செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(இ). செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் (Driving Licence)

## 8. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பப் படிவத்தில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரி தமது திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக மட்டுமே கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 9. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை :-

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| இல | விடயம் | புள்ளிகள் வழங்கப்படும் விதம் | உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **01. சேவை மூப்பு** | | | | |
| | விளையாட்டு உத்தியோகத்தர் நியமனத்தில் **எட்டு (08)** வருட திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையின் பின்னரான சேவை மூப்பு | வருடத்திற்கு **மூன்று (03)** புள்ளிகள் 06 மாதத்திற்கு மேல் **ஒரு (01)** புள்ளி | 20 | 20 புள்ளிகள் |
| **02. துறைசார் மேலதிக கல்வித் தகைமைகள்** | | | | |
| **இல** | **விடயம்** | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | **உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள்** | **உச்ச புள்ளிகள்** |
| 2.1 | விளையாட்டுத்துறை சார்பான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு மேலான தகைமை | 15 | 15 | 15 புள்ளிகள் |
| 2.2 | விளையாட்டு நிர்வாகம் , விளையாட்டு முகாமைத்துவம் போன்ற விளையாட்டுத் துறை சார்பான பொதுவான கற்கைநெறிகள் கீழ் வரும் காலப்பகுதிகளில் அடங்கக்கூடிய ஏதேனும் 03 வெவ்வேறான விடயங்களுக்காக புள்ளிகள் வழங்கப்படும் | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | 05 | |
| | ஆறு (06) மாதம் அல்லது அதற்கு மேலானது | நான்கு புள்ளிகள் (04) | | |
| | மூன்று (03) மாதம் அல்லது அதற்கு மேலானது | இரண்டு புள்ளிகள் (02) | | |
| | ஒரு (01) மாதம் அல்லது அதற்கு மேலானது | ஒரு புள்ளி (01) | | |
| | மூன்று (03) நாள் அல்லது அதற்கு மேலானது | 0.5 புள்ளி | | |
| **03. மேலதிக தொழில்சார் தகைமைகள் -** | | | | |
| **இல** | **விடயம்** | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | **உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள்** | **உச்ச புள்ளிகள்** |
| 3.1 | பயிற்றுவித்தல் தொடர்பான உயர் கற்கைநெறி ஒன்றிற்காக ஆறு (06) மாதம் அல்லது அதற்கு மேலானது | 04 புள்ளிகள் | 04 | 15 புள்ளிகள் |
| 3.2 | விளையாட்டொன்றிற்காக பயிற்றுவித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் ( Grade /Level) | | 05 | |
| | Grade A / Level III | ஐந்து புள்ளிகள் (05) | | |
| | Grade B / Level II | மூன்று புள்ளிகள் (03 | | |
| | Grade C / Level I | ஒரு புள்ளி ( 01) | | |
| **இல** | **விடயம்** | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | **உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள்** | |
| 3.3 | சர்வதேச, தேசிய மாகாண மட்ட திறந்த போட்டிகளில் அல்லது சர்வதேச தேசிய விளையாட்டு சங்கங்களால் நடாத்தப்படும் சிரேஸ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் மத்தியஸ்தர் / நடுவர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றியமை (கீழ் வரும் ஒவ்வொரு மட்டப் போட்டிகளிலும் வெவ்வேறான ஆகக்கூடிய மூன்று விளையாட்டு நிகழ்வுகள் கவனத்தில் கொள்ளலாம்) | | 06 | |
| | 1.சர்வதேச மட்ட போட்டிகள் | 3x2 = 06 | | |
| | 2.தேசிய மட்ட போட்டிகள் | 3x1.5 = 04.5 | | |
| | 3.மாகாண மட்ட போட்டிகள் | 3x1 = 03 | | |

| 04. விளையாட்டு உத்தியோகத்தர் நியமனத்தின் பின்னர் காண்பிக்கப்பட்ட விசேட திறமைகள் (தேசிய விளையாட்டு விழாவில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டுகளிற்கு மட்டும்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இல** | **விடயம்** | **புள்ளிகள் வழங்கப்படும் விதம்** | | | **உப பிரிவுகளின் உயர்ந்த புள்ளிகள்** | **உச்ச புள்ளிகள்** |
| 4.1 | சர்வதேச மட்ட போட்டியில் (பிராந்திய / பொதுநலவாய / உலக கிண்ணம் / ஒலிம்பிக்) வெற்றி பெற்ற தேசிய அணி (தனி/குழு) தொடர்பில் கீழ்வரும் பொறுப்புக்களை ஆற்றியமைக்கானது. | **தங்கம்** | **வெள்ளி** | **வெண்கலம்** | 20 | 45 புள்ளிகள் |
| | பயிற்றுநர் | 07 | 06 | 05 | | |
| | உதவி பயிற்றுநர் | 05 | 04 | 03 | | |
| 4.2 | தேசிய விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாகாண அணி (தனி / குழு) தொடர்பில் கீழ்வரும் பொறுப்புக்களை ஆற்றியமைக்கானது | **தங்கம்** | **வெள்ளி** | **வெண்கலம்** | 15 | |
| | பயிற்றுநர் | 04 | 03 | 02 | | |
| | உதவி பயிற்றுநர் | 02 | 1.5 | 01 | | |
| 4.3 | தேசிய விளையாட்டு சங்கங்ளினால் நடாத்தப்படும் சிரேஸ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிக்கானது. (தேசிய மட்டம்) | | | | 10 | |
| | பயிற்றுநர் | 03 | 02 | 01 | | |
| 4.4 | பிரதேச, மாவட்ட அல்லது மாகாண மட்டத்தில் இறுதி 05 வருடங்களுக்குள் விளையாட்டு உத்தியோகத்தரால் ஒழுங்கமைக்கப்பட்ட / மேற்கொள்ளப்பட்ட விசேட முன்னெடுப்புக்கள் | **ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டு வழங்கப்படும் புள்ளி** | **ஒவ்வொரு வகுதியிலும் கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்கூடிய செயற்பாடுகளின் எண்ணிக்கை** | | 05 | |
| | 01.பயிற்சி முகாம்கள் (Coaching Camps) | 0.5 | 06 | | | |
| | 02.விசேட விளையாட்டு போட்டிகள் | 0.5 | 04 | | | |
| | 03.விளையாட்டுத்துறை ஆக்கங்கள் | 0.5 | 04 | | | |
| | விளையாட்டுக் கழக செயற்பாடுகள் | **ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டு வழங்கப்படும் புள்ளி** | **ஒவ்வொரு வகுதியிலும் கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்கூடிய செயற்பாடுகளின் எண்ணிக்கை** | | 05 | |
| | இறுதி 05 வருடங்களுள் விளையாட்டுக் கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக போட்டிச் செயற்பாடுகள் / புத்தாக்க செயற்பாடுகள் / விழிப்புணர்வு செயற்பாடுகள் | 0.25 | 20 | | | |
| 4.5 | நேர்முக பரீட்சையில் காண்பிக்கப்பட்ட ஆளுமை , தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவ பண்புகள் | | | | **05 புள்ளிகள்** | |
| | **மொத்தம்** | | | | **100 புள்ளிகள்** | |

**ஏனைய நிபந்தனைகள்**

10. விளையாட்டு உத்தியோகத்தரின் இணைந்த சேவை விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கான சான்றிதழ்களுக்காக மீண்டும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக அல்லது மாற்றங்களை மேற்கொள்வது அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்பந்தமாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

12. இப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தினை நிரப்புவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினாலேயே மேற்கொள்ளப்படும்.

13. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் சுற்றறிக்கையில் மொழிகளிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி மூலமான சுற்றறிக்கை மேலோங்கியதாகக் கொள்ளப்படும்.

**கவனிக்கவும் :**

1. இவ் அறிவித்தலை தங்கள் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் தகைமையுடைய சகல அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும்.

2. இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவித்தலை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் மற்றும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் www.edumin.np.gov.lk என்ற இணையத்தளங்களில் பார்வையிடலாம்.

3. இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டப்படும் என எதிர்பார்க்கப்படும் இடத்து வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிர்வாக கிளையின் 021-2220039 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

**ம.பற்றிக் டிறஞ்சன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.
2025.10.30

ம. பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்